(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 422.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 நவெம்பர் 20, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3559/ '13

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான துறைசார் நிபுணர், ஆலோசகர் இவ்வகையான வேறு அதிகாரி எவரேனும் அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தில் / அலுவலகத்தில் நியமிக்கப்பட்டனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்போதிருந்து நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்களின் நியமனங்களின் நோக்கம்;

(iv) ஒரு மாதத்திற்கு அவர்களுக்காக ஏற்படும் மொத்த செலவு ஆகியவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஏதேனும் நியமனம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவர்கள் இப்போதும் பணிபுரிகின்றார்களா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களை நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட தொழில்சார் தகுதிகள் அல்லது வேறு தகவுதிறன்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4404/ '13

2.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அரசாங்க வைத்தியசாலைகளில் 2013 ஆம் ஆண்டின் சனவரி தொடக்கம் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் பயன்படுத்தப்பட்டுள்ள சேலயின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கால கட்டத்தினுள் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் பயன்படுத்தப்பட்ட சேலயின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த சேலயின் அளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சேலயின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் சேலயின் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது சேலயின் இறக்குமதி செய்யப்படும் நாடுகள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நாட்டின் சேலயின் உற்பத்தி உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லையெனில், வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் சேலயின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் சேலயின் இறக்குமதிக்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் சேலயின் உற்பத்தியை ஆரம்பிக்கின்ற ஒருவருக்கு அரசாங்கத்தின் மூலம் வழங்கக் கூடிய சலுகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5264/ ’14

3.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நக்கிள்ஸ் வன ஒதுக்கப் பிரதேசத்தில் ஏலக்காய் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த அண்ணளவாக எழுநூறு குடும்பங்கள் அப்பிரதேசத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தில் ஏலக்காய்ப் பயிர்ச்செய்கை தடைசெய்யப்பட்டமைக்கும் இந்தியாவிலிருந்து அதிகளவில் ஏலக்காய் இறக்குமதி செய்யப்படுவதற்குமிடையில் ஏதேனுமொரு தொடர்பு உள்ளதென்பதையும்;

(iii) பிரித்தானிய ஆட்சியாளர்களின் காலம் தொடக்கம் 75 ஆண்டுகளுக்கும் அதிக காலம் அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களின் பொருளாதார நலனுக்கு காரணமாக அமைந்திருந்த மேற்படி ஏலக்காய்ப் பயிர்ச்செய்கை தற்போது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட ஏலக்காய்ப் பயிர்ச்செய்கை மற்றும் குறித்த பயிர்ச்செய்கையாளர்களின் நலன் கருதி ஏதேனுமொரு நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5425/ '14

4.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களை தற்காலிகமாக ஆட்சேர்ப்புச் செய்யும் சட்டரீதியான கொள்கைச் சட்டகம் யாது என்பதையும்;

(ii) இவர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் எவ்வளவு காலம் தற்காலிக அடிப்படையில் சேவையாற்ற வேண்டும் என்பதையும்;

(iii) தற்காலிகமாக சேவையாற்றுகின்ற காலத்தினுள் இவர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக வேறு கொடுப்பனவுகளை (மாதாந்தம் அல்லது தொழில் காலத்தின் இறுதியில்) மேற்கொள்வதற்கு சேவை பெறுனருக்கு சட்டரீதியான கடப்பாடு உள்ளதா என்பதையும்;

(iv) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் இவர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதையும்

(v) இன்றேல், ஏன் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5486/ '14

5.

கௌரவ காமினீ ஜயவிக்ரம பெரேரா,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் நியூசிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜர்சி இன கறவை மாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதற்கென செலவிடப்பட்ட பணத் தொகை (அமெரிக்க டொலர்) யாதென்பதையும்;

(iii) அந்த கறவை மாடுகளில் நோய்வாய்ப்பட்ட மற்றும் இறந்தவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அந்த கறவை மாடுகள் நுவரெலியா பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு பொருத்தமானவை அல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அந்த கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டது அரசாங்கத்தின் நிதி மூலமா அல்லது கடனுதவி அடிப்படையிலா என்பதையும்;

(ii) அந்த கறவை மாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) கறவை மாடுகள் தேசிய கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் பண்ணைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டனவா இல்லாவிடின் தனிப்பட்ட பால் பண்ணையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டனவா என்பதையும்;

(iv) குருநாகல் மாவட்டத்திலுள்ள தேசிய கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் எந்தப் பண்ணைக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(v) அந்த கறவை மாடுகளில் நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்துபோனவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) தற்போது நெதர்லாந்திலிருந்து கறவை மாடுகளை கொள்வனவு செய்வதற்கான கட்டளை அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடப்படும் பணத் தொகை யாதென்பதையும்;

(iii) அத்தொகை வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்படுகின்றதா என்பதையும்;

(iv) 30-40 லீற்றர் பால் தருகின்றதும், இந்நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்குப் பொருத்தமானதுமான இந்திய கறவை மாடுகள் உள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், இந்தியாவிலிருந்து கறவை மாடுகள் ஏன் இறக்குமதி செய்யப்படுவதில்லை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5597/ ’14

6.

கௌரவ பாலித தெவரப்பெரும,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.06.15 ஆம் திகதியன்றும் அண்மித்த தினங்களிலும் அழுத்கம, தர்கா நகரம் மற்றும் வெலிபென்ன பிரதேசங்களில் உருவாகிய கலவர நிலைமை தொடர்பில் முறைசார்ந்த விசாரணையொன்று நடைபெறுவதாயின் அதன் தற்போதைய நிலைமை யாது;

(ii) மேற்படி சம்பவங்களை ஆரம்பிப்பதற்கும் வளர்ச்சியடையச் செய்யவும் தூண்டுதலளித்தவர்கள் மற்றும் தாக்குதல்களை நடத்தியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா;

(iii) அவர்கள் யாவர்;

(iv) அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சேதமடைந்த வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றுடன் தொடர்புடையதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்றும் செலுத்தப்பட்டுள்ள இழப்பீடுகளின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(iii) சேதமடைந்த வீடுகளும் வர்த்தக நிலையங்களும் இயல்புநிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனவா;

(iv) அவ்வெண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி சம்பவத்தின்போது,

(i) மரணமடைந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மரணமொன்றுக்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டுத்தொகை யாது;

(iii) இன்றேல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது;

(iv) மரணமடைந்தவரின் நெருங்கிய உறவினருக்கு அந்த இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளதா;

(v) இடம்பெயர்ந்த சிங்கள மற்றும் முஸ்லீம் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(vi) அறிக்கையிடலில் ஈடுபட்டிருந்த வேளையில் தாக்குதலுக்கு இலக்காகிய வெகுசன ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை யாது;

(vii) சேதமடைந்த ஊடக சாதனங்களுக்காக இழப்பீடு செலுத்தப்படுமா

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5657/ '14

7.

கௌரவ விஜித ஹேரத்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பில் முதலாவது அட்டவணையின் பின்னிணைப்பு "அ" வில் குறிப்பிடப்பட்டுள்ள இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளில் திணைக்களத் தலைவர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இ.நி.சே. விசேட தரப் பதவிகளின் நியமன அதிகாரி யாரென்பதையும்;

(iii) இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு நியமிக்கும் நடைமுறை யாதென்பதையும்;

(iv) இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள இ.நி.சே. அல்லாத அலுவலர்களின் எண்ணிக்கை யான்பதையும்;

(v) 2012.07.02 தொடக்கம் 2014.01.01 வரையிலான காலப்பகுதியில் இ.நி.சே. விசேட தரப் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவிய நிறுவனங்கள் அப் பதவிகளின் பெயர்கள் மற்றும் நிறுவனங்கள், பதவிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இ.நி.சே.தரம் ஒன்று அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், தரம் ஒன்றுக்கு தரமுயர்த்தப்பட்ட திகதி, பட்டப்பின் பட்டம் செல்லுபடியாகும் திகதி, அப்பட்டத்தை வழங்கிய பல்கலைக்கழகம், மற்றும் பட்டத்தின் பாடத்துறை வெவ்வேறாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட இருபத்திரெண்டாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவெம்பர் 19).

* 2.

நீதி அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 13 ஆம் திகதிய 1875/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்தி வரி தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்தி வரி தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/43 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/44 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கங்கள் 968, 969, 970, 971 மற்றும் 972)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2014 ஒற்றோபர் 24 ஆந் திகதிய 1885/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் பந்தி (2) இன் உடனும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 11 ஆம் திகதிய 1875/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 14 ஆம் திகதிய 1875/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.4),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 22 ஆம் திகதிய 1876/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.5),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 04 ஆந் திகதிய 1878/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதிய1885/45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதிய 1885/46 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் அந்தச் சட்டத்தின் 6 ஆம் பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய 1882/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 02 ஆம் திகதிய 1882/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.4),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய 1883/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 20.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 22.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 26.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 27.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 28.

வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

29.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

ஸிவ்முனி ஸேவெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

37.

இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப் பணியாளர்களின் ஒன்றியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

38.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

39.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---